## 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## அ.வ.எண்.428/2016

10.11.2021 -வா.சா.1-திரு.சிவன் பாண்டி

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் விவசாயம் செய்துவருகிறேன். எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேலப்பாளையம் சர்வே எண்.84/1ஏ-ல் உள்ள 4.36 செண்டை பொறுத்து மட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.84/1ஏ-ன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 71 செண்ட் என்றால் சரிதான். நான் கோரியுள்ள 4.36 சென்ட் எனது தந்தைக்கு கிரையம் மூலமும், எனக்கு பாகப்பிரிவினையில் 7-பிளாட்கள் கிடைத்தது. அந்த 7 பிளாட்களில் ஒரு பிளாட்டை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதை பொறுத்து இடைஞ்சல் இருந்ததால் வழக்கு தாக்கல் செய்தேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் பிராது தபசில் சொத்தை எனக்கு கிரையம் கொடுத்த நபர்கள் என நான் குறிப்பிட்டுள்ள சங்கதி தவறானது என்றால் சரிதான். தபசில் சொத்து மற்றும் 1 ஏக்கர் 71 செண்ட் முழுவதும் பட்டா எண்.123 மூலம் பிரதிவாதிகள் பெயரில் நாளது தேதியில் உள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், நாளது தேதி வரை மொத்தசொத்திற்கும் பட்டா பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் பெயரை பட்டாவிலிருந்து நீக்கம் செய்ய நான் பாளையங்கோட்டை வட்டாட்சியரிடம் மனு செய்தேனா என்றால் செய்தேன். அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து பிரதிவாதிகள் தரப்பில் கோட்டாட்சி தலைவரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். கோட்டாட்சி தலைவர் பிரதிவாதிகளின் மேல்முறையீட்டை அனுமதித்தார் என்றால் சரிதான். அதை எதிர்த்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் நான் மேல்முறையீடு செய்தேன். கோட்டாட்சி தலைவர் உத்தரவு ரத்து செய்யப்பட்டது. கோட்டாட்சி தலைவர் உத்தரவை எதிர்த்து 1ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் ரிட் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த ரிட் மனுவில் மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவை ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனால் தபசில் சொத்தை பொறுத்து நாளது தேதியில் பட்டா பிரதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்றால்

சரியல்ல. பிரதிவாதிகள் தபசில் சொத்தில் தங்களுக்கு எவ்வாறு உரிமை உள்ளது என கட்சி செய்கிறார்கள் என்றால் தனது மூதாதையர் செய்கு முகம்மது தரகனாருக்கு கிரையம் ஏற்பட்டதாக கட்சி செய்கிறார்கள். நீதிமன்ற ஏல நடவடிக்கையில் செய்கு முகம்மது தரகனாரின் சொத்து ஏலத்திற்கு போய்விட்டதால் அவருக்கு உரிமை இல்லை. ஆதியில் சொத்து சுக்கன் செய்யது முகம்மதுக்கு பாத்தியப்பட்டது. அவர் 09.05.1927ல் 1ம் பிரதிவாதியின் தந்தையின் தந்தைக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். ஏலம் மூலம் கிடைத்ததாக சொல்லும் சொத்து நான் வாழ்விப்பு பெற்றேனா என்றால் நீதிமன்றம் மூலம் வாழ்விப்பு பெற்றேன். நீதிமன்றம் மூலம் எனது மூதாதையர் வாழ்விப்பு பெறவில்லை என்றால் சரியல்ல. அந்த வாழ்விப்பின் மூலம் எனது மூதாதையர்களுக்கு தபசில் சொத்தின் உரிமை மாறவில்லை என்றால் சரியல்ல. வாழ்விப்பின் அடிப்படையில் எனது மூதாதையர்கள் சொத்தை அனுபவித்ததே இல்லை என்றால் சரியல்ல.பிராதில் வாழ்விப்பு எடுத்ததற்கு ஆதாரம் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் வாழ்விப்பே எடுக்காத காரணத்தால் தான் அதற்கான ஆதாரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1990ல் 1ம் பிரதிவாதி சொத்தை பொறுத்து ஒரு அடமானம் ஏற்படுத்தினார் என்றால் சரிதான். அவர் பெயருக்கு அனுபவம் உரிமையும் இருந்ததால் தான் அடமானம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.428/2016**

01.12.2021 -வா.சா.1-திரு.சிவன்பாண்டி

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனது முன்னோர்கள் 1 ஏக்கர் 71 சென்ட் சொத்தை வாழ்விப்பு எடுத்தது சம்பந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்துள்னோ என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதற்கு பட்டா எண்.123 பெற்றுள்ளோம். அந்த பட்டா பிரதிவாதிகள் குடும்பத்திற்கு சொந்தமானது என்றால் சரியல்ல. பட்டா எண்.123ல் தவறுதலாக பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்பட்டதால் அதை ரத்து செய்ய நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். பட்டா எண்.123 பிரதிவாதிகள் பெயரில் தான் ஆரம்பத்தில் இருந்தது. பொதுவாக ஒருவரது அனுபவத்தில் உள்ள சொத்தை தான் அடமானம் வைக்க முடியும் என்றால் அடமானம் சொத்தின் மீது எந்த உரிமையும் ஏற்படுத்தாது. பிரதிவாதி பெயரில் தபசில் சொத்தின் உரிமை அனுபவம் இருந்ததால் தான் அவர் அடமானம் வைத்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் தபசில் சொத்தை வாழ்விப்பு எடுத்ததற்கான ஆவணம், அ.வ.எண்.250/38 வழக்கின் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் குறிப்பிட்டள்ள வழக்கு பதிவேட்டு நகலில் கண்ட சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல. அது சம்பந்தம் இல்லாத ஆவணம் என்பதால் தான் அதை நாங்கள் குறியீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணத்தை நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கில் குறியீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது முன்னோர்கள் சொத்தை வாழ்விப்பு எடுத்ததற்கான ஆதாரம் நான் தாக்கல் செய்த ஆவணங்களில் உள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது. நான் சொல்வது போல் வாழ்விப்பு எடுக்காததால் தான் அந்த

ஆவணத்தை தாக்கல் செய்யவோ, குறியீடு செய்யவோ இல்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்திற்கு நகர ஊரமைப்பு அலுவலகத்திடம் பெற்ற அனுமதி நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் அனுமதி பெறாததால் தான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா எண்.123 தொடர்பாக வட்டாட்சியர் அலுவலகம் முதல் உயர்நீதிமன்றம் வரை தாவா நடைபெற்றது என்றும், அதில் 1ம் பிரதிவாதிகளுக்கு அனுகுலமாக தீர்வானது என்றும் சொன்னால் ஆவணங்களை உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தீர்வு காணுமாறு முடிவு செய்யப்பட்டது. பட்டா எண்.123 இன்று வரை 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றும், அதை நீக்கரவு செய்தது தவறு என்று தான் உயர்நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது என்றால் சரியல்ல. தபசில் சொத்திற்கும், எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கும் இதுவரை எங்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு வழங்கப்பட்ட பட்டா எண்.55 ஆகும். வா.சா.ஆ.10 டவுண் சர்வே பதிவேட்டில் 1ம் பிரதிவாதியின் தந்தை மற்றும் 5 நபர்கள் பெயரில் பட்டா உள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நில உச்சவரம்பு சட்டத்தின் படி 1ம் பிரதிவாதியின் தந்தை மற்றும் அவரது சகோதரரிடம் இருந்து தான் 1 ஏக்கர் 71 சென்ட் எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. செய்யது ஏ.ஹெச். அகமது அலி என்பவரிடமிருந்து எடுக்கப்பட்டது. நான் அகமது அலியிடமிருந்து எடுக்கப்பட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்தும், எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்தும் திறந்த வெளியில் தான் உள்ளது என்றால் சரிதான். அதில் யாரும் உள்ளே நுழைய முடியும் என்றால் சரிதான். அதில் அடைப்பு இல்லை. 01.11.2016ல் பிரதிவாதி 4.36 சென்ட் உள்ள இடத்தில் இடைஞ்சல் செய்தார். 1 ஏக்கர் 71

சென்ட் விஸ்தீரணத்தில் 4.36 சென்டை மட்டும் இடைஞ்சல் செய்தார். 4.36 சென்டில் ஜே.சி.பி மூலம் தொண்டியதாக பிராதிலும், இடைக்கால மனுவிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இடைஞ்சல் செய்ததாக சொல்லியுள்ளோம். நான் சொல்வது போல் பிரதிவாதி எனது அனுபவத்தை இடைஞ்சல் செய்ய அவசியம் இல்லை என்றும், ஏனெனில் சொத்தே அவருடையது தான் என்றும் சொன்னால் சரியல்ல. உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு தான் எங்கள் பெயரில் பட்டா வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. அதற்கு முன்னதாகவே வாங்கிவிட்டோம். உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு பிறகு அதை மறைத்து,. ஏமாற்றி எங்கள் பெயரில் பட்டா வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. எனது முன்னோர்கள் வாழ்விப்பு எடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும், அவ்வாறு வாழ்விப்பு எடுத்ததாக சொல்லும் காலத்திற்கு 12 ஆண்டுக்குள் சுவாதீனம் பெறாததால் அந்த தீர்ப்பின் படி எங்களுக்கு சொத்து சொந்தம் என்று சொல்வது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. நாங்கள் சொத்தின் உரிமை ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் வழக்கு சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாழ்விப்பு எடுத்ததை நிரூபிக்காததாலும் தபசில் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் வேறு சொத்துக்களின் ஆவணத்தை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் பிராது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றும், பிராதை தள்ளுபடி செய்ய தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.428/2016**

02.12.2021 -பி.வா.சா.1-திரு.சிவன் பாண்டி

**8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

மொத்த 3 ஏக்கர் 41 செண்ட்க்கு முதல் கிரையம் பிரதிவாதிகளின் தாத்தா செய்யது முகமது தரகனாருக்கு என்றால் சரிதான். என் முன் பாத்தியஸ்தர்கள் முதலில் எனது கட்சிப்படியே அடமானம் தான் ஏற்பட்டது என்றால் சரி தான். அடமானத்திற்கு பிறகு எனது முன்பாத்தியஸ்தர்களிடமிருந்து பல கிரையங்கள் நடந்துள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தாத்தாவிடமிருந்து தபசில் சொத்தைப் பொறுத்து 1927க்கு பிறகு எந்த கிரையமும் நடக்கவில்லை என்றால் சரி தான். நீதிமன்றத்தின் மூலம் ஏலக் கிரையம் நடந்துள்ளது. பிரதிவாதிகளின் தாத்தாவும், அதன் பிறகு பிரதிவாதிகளும் தான் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. 31.10.1943ல் செய்யது அபுபக்கர் தரகனார் கிரையம் பெற்ற பிறகு, பிரதிவாதி தாத்தா கிரையம் பெற்ற ஆவணத்தைப் பொறுத்து செல்லாது என்றும், வாழ்விப்பு பெறவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தால் வாழ்விப்பு பெறப்பட்டது. வாழ்விப்பு பெறமுடியாத காரணத்தினால் தான் 1944ல் அபுபக்கர் கிரையம் கொடுத்து விட்டார் என்றால்சரியல்ல. அது போல 1944ல் அப்துல் ஹை தரகனார் வாழ்விப்பு பெற முடியாததால் 24.12.1945ல் முகமது அப்துல்லா தரகனாருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 31.10.1943 கிரைய ஆவணத்தில் வாழ்விப்பு பெற்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் உண்மையிலேயே வாழ்விப்பு பெற்றிருந்தால் ஆவணப்படி சொத்தை அனுபவத்திருப்பார்கள் என்றும், வாழ்விப்பு பெறமுடியாததால் தான் அடுத்த நபர்களுக்கு சொத்தை

கைமாற்றி விட்டார்கள் என்றால் சரியல்ல. அதே போல் தான் எனது தந்தைக்கு முன் பாத்தியஸ்தர்கள் கைமாற்றி விட்டார்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு உரிமை, அனுபவம் இல்லாத காரணத்தினால் தான் பிரதிவாதியின் தாத்தா பெயரில் உள்ள ஆவணங்களை மாற்றுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பட்டா மாற்ற தாசில்தாரிடம் மனு கொடுத்துள்ளார். எனது தந்தை பெயரில் ஆவணம் மாறியதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை கிரையம் பெற்ற தேதியிலிருந்து 12 ஆண்டுகள் கழித்து தான் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் முழு விஸ்தீரணத்திற்கு விளம்புகை பரிகாரம் கேட்காமல் மனை எண்.2க்கு மட்டும் கேட்டுள்ளோம் என்றால் சரி தான். அதே போல் நானும் வாழ்விப்பு பெறமுடியாமல் தான் ஒரு மனைக்கு மட்டும் வழக்கு போட்டு விட்டு இதில் ஜெயித்தால் மற்ற மனைகளுக்கு வழக்கு தாக்கல் செய்யலாம் என இருக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தின் செண்ட் மதிப்பு எவ்வளவு என்றால் தெரியாது. சொத்தின் அனுபவத்தில் இல்லை என்பதால் தான் அந்த மதிப்பு தெரியவில்லை என்றால்சரியல்ல. மொத்த விஸ்தீரணத்திற்கும் வழக்கு தாக்கல் செய்தால் நீதிமன்ற கட்டணம் அதிகமாகும் என்பதால் ஒரு மனைக்கு மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு மனையை மட்டும் பிரதிவாதி இடைஞ்சல் செய்ததாக கூறியுள்ளேன். அந்த தேதியில் பிரதிவாதியுடன் யார் வந்தார் என்றால் இரண்டு பேர் வந்தார்கள். பெயர் தெரியாது. அன்று என்னுடன் யார் இருந்தார் என்றால் நானும், எனது தம்பியும் இருந்தோம். வேறு யாரும் இல்லை. பிரதிவாதி இடைஞ்சல் செய்தவுடன் காவல் நிலையத்தில் புகார்கொடுத்தோமா என்றால் தடுத்தோம். போய் விட்டார்கள். நான் சொல்லும் தேதியில் யாரும் ஜேசிபி

வைத்து இடைஞ்சல் செய்யவில்லை என்பதால் நான் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. என்னுடன் உடன் பிறந்த சகோதரர் உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்றால் சரிதான். நாங்கள் இரண்டு பேரும் சம்பவ இடத்தில் இருந்த போது முதலில் எந்த மனைக்கு இடைஞ்சல் செய்தார் என்றால் மனை எண்.2ல் இடைஞ்சல் செய்தார். அதன் பிறகும் தடுத்தோம் நிறுத்திவிட்டார். பின்னர் மீண்டும் தம்பி இடத்திற்கு சென்று இடைஞ்சல் செய்தார். நானும், எனது தம்பியும் சொல்லும் வழக்கு மூலம் கற்பனையாக உள்ளது என்றால் சரியல்ல. என் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. எனது தந்தை பெயரில் உள்ளது. எனது தந்தை பெயரில் உள்ள பட்டாவை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அது சம்மந்தமான உயர்நீதிமன்ற நடவடிக்கை முடிந்து விட்டது. உயர்நீதிமன்ற கிளையில் பட்டா சம்மந்தமான மேல்முறையீடு நடவடிக்கையில் நான் தரப்பினரா என்றால் தரப்பினர் தான். அந்த உயர்நீதிமன்ற உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். அதில் பிரதிவாதிக்கு சாதகமான அம்சம் உள்ளதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உயர்நீதிமன்ற உத்தரவு வந்த பிறகு வருவாய் துறை ஆவணங்களில் என் பெயரில் பட்டா மாற்றியுள்ளது நீதிமன்ற அவமதிப்பு என்றால் சரியல்ல. அகமது அலியிடமிருந்து நில உச்சவரம்பில் நிலம் எடுத்தது தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நில உச்ச வரம்பு ஆவணங்கள் எல்லாம் பிரதிவாதியின் தந்தை மற்றும் சகோதரி பெயரில் உள்ளது என்றும், அவரிடமிருந்து தான் நிலம் எடுத்ததாக உள்ளது என்றால் சரியல்ல. அந்த நில உச்சவரம்பு சட்ட ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறோம்.

அந்த ஆவணங்கள் எல்லாம் பிரதிவாதியின் தந்தை மற்றும் சகோதரி பெயர் உள்ளது என்றால் சரியல்ல. மொத்த விஸ்தீரணத்திற்கும்விளம்புகை பரிகாரம் கேட்காமல் 1 மனைக்கு மட்டும் விளம்புகை பரிகாரம் கேட்பது சட்டப்படி தவறானது என்றும், எனவே, இந்த வழக்கு, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. மதுரை உயர்நீதிமன்ற கிளையில் உத்தரவு பிறப்பித்த பிறகும், அந்த நடவடிக்கை நிலுவையில் உள்ளதாக தவறாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

அ.வ.எண். 428/2016

2021 வது ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் நாள் P.W2ன் சாட்சிய வாக்கு மூலம் (1969ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.மாரிபாண்டி | வட்டம் : | திருநெல்வேலி |
| த/பெ : | திரு.நாராயணன் | கிராமம் : | |
| வயது : | 52 | மதம் : | |

**<u>15.12.2021 முதல் விசாரணை:</u>** நான் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 428 /2016**

17.03.2022 – வா.சா.1 திரு.மாரிபாண்டி

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் செய்து வருகிறேன். நானும், வாதியும் ஒரே ஊர்காரர்கள். வாதி சொல்லி தான் இந்த வழக்கு என்ன பரிகாரத்திற்காக யார் மீது போடப்பட்டுள்ளது என்று தெரியும், இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. பொதுவாக வாதி தொடுக்கும் வழக்கிற்கெல்லாம் நானும், சாட்சியம் அளிக்க செல்வேன் என்றால் சரியல்ல. நான் வாதியின் வழக்கிற்கெல்லாம் சாட்சியம் அளிப்பேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்து மேலப்பாளையம் மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். தபசில் சொத்தில் கல் மட்டும் நடப்பட்டுள்ளது. அதில் சில இடங்களில் முள் செடி வளர்ந்துள்ளது. தபசில் சொத்தில் சுற்றுச்சுவர், மற்றும் வேலி போன்றவை இல்லாததால் பிற நபர்கள் தபசில் சொத்திற்குள் செல்லமுடியும் என்றால் சரிதான். வாதிக்கு தபசில் சொத்து அனுபவித்தில் உள்ளது என்று பத்திரம் மற்றும் பட்டாவின் அடிப்படையில் கூறுகிறேன். வாதி பெயரில் இருந்த பட்டா ரத்து ஆன விபரம் எனக்கு தெரியும். மேற்படி பட்டா ரத்து ஆனதை எதிர்த்து வாதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த விபரம் எனக்கு தெரியும். மேற்கண்ட மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனவே தற்சமயம் வாதி பெயரில் பட்டா இல்லாத காரணத்தினால் வாதியின் அனுபவத்தில் தபசில் சொத்து இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 22.07.2004 ம் ஆண்டு வாதி கிரையம் பெற்ற விபரம், நான் அந்த ஊரில் இருந்ததால் தெரியும். மேற்கண்ட நாளில், பத்திரம் பதிவு செய்த விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் ஒரே ஊரில் இருப்பதால் எனக்கு தெரியும். அதே போல் 17.02.2016 தேதியிட்ட பாகப்பிரிவினை பற்றியும் ஊரில் இருப்பதால் எனக்கு தெரியும். மேற்கண்ட 2 பத்திரங்களுக்கு நான் சாட்சி

கையொப்பம் போடவில்லை. தபசில் சொத்து அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனை என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால் அனுமதி கடிதம் உள்ளது. வீட்டுமனைக்கு மாநகராட்சி அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்து வாதி முன்பாத்தியஸ்தர்களுக்கு எப்படி கிடைத்தது என எனக்கு தெரியும். வாதி முன்பாத்தியஸ்தர்கள் தபசில் சொத்தை நீதிமன்ற ஏலம் மூலம் எடுத்த விபரம் எனக்கு தெரியும். நீதிமன்ற ஏல ஆவணங்களை நான் படித்து பார்த்துள்ளேன். மேற்படி ஏல தபசில் சொத்திற்கும், வழக்கு தபசில் சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கும், பிரிதவாதிக்கும் 2016 முதல் பிரச்சனை என நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் என்ன பிரச்சனை என கூறிவில்லை. வாதிக்கும் எனக்கும் வட்டி தொழில் செய்யும் வகையில் பழக்கம் என்பதால், வாதி போடும் வழக்கிற்கெல்லாம் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.428/2016**

28.06.2022 – வா.சா. திரு.சிவன்பாண்டி

**இ.ம.எண்.3/22 அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி மீண்டும் வாதி தரப்பில் முதல் விசாரணை**

அ.வ.எண்.250/1938 வழக்கு பதிவேட்டின் நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12 ஆகும்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.428/2016**

05.07.2022 – வா.சா.1 திரு.சிவன்பாண்டி

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.12ல் சர்வே எண்.83/84 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த சர்வே எண்.84/1ஏ என்றால் சரிதான். 1ஏ என்பது உட்பிரிவு ஆகும். சர்வே எண்.83/84 தான் 84/1ஏ என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா வழக்கிற்கும், வா.சா.ஆ.12 க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு எஸ்.என்.எம்.முகம்மது மைதீன் என்பவரிடம் அடமானம் வைத்தது தொடர்பான வழக்கு என்றால் சரிதான். தபசில் சொத்தை நான் எப்போது வாழ்விப்பு செய்து பெற்றேன் என்றால் 1943லேயே பெற்றுவிட்டேன். ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் வழக்கு சொத்தை வாழ்விப்பு பெறவில்லை என்றும், ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. தபசில் சொத்தின் பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதி தான் தாக்கல் செய்தார். பிரதிவாதி பெயரில் உள்ள பட்டாவை நீக்கரவு செய்யக் கோரி வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன். அந்த மனு அனுமதிக்கப்பட்டு, எனக்கு சாதமாக தீர்ப்பு வந்தது. அதை எதிர்த்து 1ம் பிரதிவாதி கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்தார். கோட்டாட்சியர் 1ம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கினார். அதை எதிர்த்து நான் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல் முறையீடு செய்தேன். மாவட்ட வருவாய் அலுவலர் கோட்டாட்சியர் உத்தரவை ரத்து செய்தார். அதை எதிர்த்து 1ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். அதில் விசாரணை நீதிமன்றத்தில், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் சமர்பித்து பட்டா பெற்று கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தில் நான் தரப்பினர். உயர்நீதிமன்ற உத்தரவில் மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவு தள்ளுபடி செய்யப்படுகிறது என்றால் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. நாளது தேதி வரை பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. என் பெயரில் பட்டா இல்லை என்றாலும், அதனால் தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பட்டா என் பெயரில் உள்ளது. வா.சா.ஆ.12 தரப்பினர்களின் கொடி வழி ஜாபிதா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 12ன் சர்வே எண் வேறு, தாவா சர்வே எண் வேறு என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் ஆவணத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் வாழ்விப்பு பெறவில்லை என்றால் சரியல்ல.

8ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை ஏற்று கொள்கிறார்.

**<u>1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>**

**<u>அ.வ.எண். 428/2016</u>**

2022 வது ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ம் நாள் D.W.1 ன் சாட்சிய வாக்கு மூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.செய்யது முகம்மது புகாரி | வட்டம் : | திருநெல்வேலி |
| த/பெ : | திரு.மர்ஹீம் செய்பு முகைதீன் பிச்சை | கிராமம் : | |
| வயது : | 63 | மதம் : | |

**<u>08.08.2022 முதல் விசாரணை:</u>** நான் 1 ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.428/2016**

16.09.2022 – பி.வா.சா.1 திரு.செய்யது முகம்மது புகாரி

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**

15.02.2017 தேதியிட்ட சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்த உத்தரவு நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். தபசில் சொத்திற்குரிய 10(1) அடங்கல் பி.வா.சா.ஆ 2 ஆகும். தபசில் சொத்திற்குரிய தீர்வை ரசீது பி.வா.சா.ஆ.3 ஆகும். 1990ம் வருடத்திய ஆவண எண்.1710/1990 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.4 ஆகும். 27.03.2003 தேதியிட்ட பாளையங்கோட்டை சுற்றுக்குழு துணை ஆய்வாளர் தபசில் சொத்து சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு (5 எண்ணிக்கை) பி.வா.சா.ஆ.5 ஆகும்.

**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 428/2016**

03.01.2023– பி.வா.சா.1 திரு.செய்யது முகம்மது புகாரி

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சர்வே எண்.84/1 ன் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 41 சென்ட் என்றால் சரிதான். அது ஆதியில் சுக்கன் செய்யது முகம்மது லெப்பை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சுக்கன் செய்யது முகம்மது லெப்பை தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை முகம்மது மைதீன் என்பவரிடம் அடமான கடனை பெற்று கொண்டு 20.09.1924 ல் ஒரு அடமான ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த அடமான கடனை உட்படுத்தி சுக்கன் செய்யது முகம்மது லெப்பை 09.05.1927 ல் செரிப் முகைதீன் தரகனார் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.
2. முகம்மது முகைதீன் வாதியாக இருந்து சுக்கன் செய்யது முகம்மது லெப்பை மற்றும் செரிப் முகைதீன் ஆகியோரை பிரதிவாதிகளாக சேர்த்து அ.வ.எண்.250/1938 என்ற வழக்கை திருநெல்வேலி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் 28.02.1939 ல் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. முதல் நிலை தீர்ப்பாணையை அனுசரித்து 05.12.1939 ல் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.
3. அவ.எண்.250/1938 பற்றிய விபரத்தை வாதி பிராதில் கூறியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கை பற்றிய விபரங்கள் உண்மையா பொய்யா என்று விசாரணை செய்தேனா என்றால் தெரிந்து கொண்டேன். அதில் உள்ள விபரங்கள் தவறு. அந்த வழக்கைபற்றி யாரிடம் எப்போது விசாரணை செய்தேன் என்றால்

ஆதியில் இருந்து பட்டா ஆவணங்கள் எங்கள் பெயரில் உள்ளது. அந்த வழக்கில் நிறைவேற்றுதல் மனு எண்.581/1942 மூலம் தாவா சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். ஆனால் சர்வே எண் தவறு. நிறைவேற்றுதல் மனு எண்.581/1942 சம்பந்தப்பட்ட ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த நிறைவேற்றுதல் மனுவில் உள்ள சர்வே எண் தவறு என காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. மேற்படி நிறைவேற்றுதல் மனுவில் முகம்மது மைதீன் வாரிசுகள் 11.12.1942 ல் நீதிமன்றம் மூலம் கிரையம் பெற்றுள்ளனர் என்றால் தவறு. 11.12.1942 தேதியிட்ட கிரைய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. ஏல கிரையம் 13.1.1943 ல் நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்ட விபரம் பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளதை பற்றி விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

5. மேற்படி ஏல கிரையத்தை அனுசரித்து முகம்மது மைதீனின் வாரிசுகள் தாவா சொத்தான சர்வே எண்.84/1 ஐ சுவாதீனம் பெற இ.ஏ.எண்.827/1943 தாக்கல் செய்து அதில் நீதிமன்றம் மூலமாக 19.09.1943 ல் வாழ்விப்பு பெற்றதாக வாதி பிராதில் கூறியுள்ளது பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் ஏலமே என்னுடைய இடத்தை பற்றி நடக்கவில்லை. அ.வ.எண்.250/1938 ன் வழக்கு பதிவேட்டை வழக்குடன் தாக்கல் செய்துள்ளார். அதை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த வழக்கு பதிவேட்டில் வாழ்விப்பானது 11.10.1943 ல் பதிவு செய்யப்பட்டுள்ளதை நான் பார்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

6. நான் 09.05.1927 ல் கிரையம் பெற்ற செரிப் மைதீன் என்பவரின்

வாரிசு. 19.09.1943 க்கு பின்பு பல கிரையங்கள் தாவா சொத்தை குறித்து ஏற்பட்டது என்றால் சரிதான். 31.10.1943 ல் செயிபு அபுபக்கர் தரகனார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஆனால் என் மூதாதையரிடம் இருந்து கிரையம் பெறவில்லை. தாவா சர்வே எண்ணை பொறுத்து 15.04.1944, 24.12.1945 மற்றும் 29.01.1967 கிரைய பதிவுகள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. 1927 ம் ஆண்டிற்கு பிறகு தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழ் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வில்லங்க சான்றிதழை வாதி தாக்கல் செய்துள்ளார். அதை படித்து பார்த்து, அதில் உள்ள ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

7. தாவா சர்வே எண்ணை குறித்து நில உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட 1 ஏக்கர் 70 சென்டிற்கு சர்வே எண்.84/1 பி என்றும், மீதம் உள்ள 1 ஏக்கர் 71 சென்டிற்கு சர்வே எண்.84/1 ஏ என உட்பிரிவு செய்தனர் என்றால் சரியல்ல. நில உச்ச வரம்பு ஆர்ஜிதம் செய்வதற்கு விசாரணை செய்யப்பட்டேனா என்றால் இல்லை. எனக்கோ எனது மூதாதையருக்கோ நில ஆர்ஜிதம் அலுவலகத்திலிருந்து அறிவிப்பு ஏதும் வந்ததா என்றால் இல்லை.

8. சர்வே எண்.84/1 ஏ–ல் கண்ட 1 ஏக்கர் 71 சென்ட் நிலம் முகைதீன் பாத்திமாள் பீவி என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. முகைதீன் பாத்திமாள் பீவிக்கு யார் யார் வாரிசுகள் என பிராதில் வாதி குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி விசாரிக்கவில்லை.

**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 382/2016**

31.01.2023– பி.வா.சா.1 திரு.செய்யது முகம்மது புகாரி

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. தாவா சொத்து குறித்து நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்த போது அதில் நான் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் தாவா சொத்து ஆர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டதா அல்லது உரிமையாளருக்கே திருப்பி அளிக்கப்பட்டுவிட்டதா என்றால் தெரியாது. நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கைக்கு பிறகே தாவா சொத்தின் சர்வே எண்.84/1 என்பது 84/1 ஏ மற்றும் 84/1 பி என பிரிக்கப்பட்டது என்றால் சரிதான்.
2. தாவா சொத்து தற்போது சர்வே எண்.84/1 ஏ–ல் உள்ளது அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 71 சென்ட் என்றால் சரிதான். மேற்படி சொத்தானது சப்பாணி முகம்மது அபுபக்கரின் மனைவி முகைதீன் பாத்திமாள் பீவிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் தந்தை இசக்கிபாண்டியை எனக்கு தெரியும். தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழில் நாளது தேதி வாதியின் தந்தை பெயரில் குறிப்பு உள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.
3. தாவா சொத்தை வாதியின் தந்தை கிரையம் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்குரிய பட்டா 123 முதலில் 1ம் பிரதிவாதி பெயரில் கொடுக்கப்பட்டிருந்தது என்றால் தவறு. செய்யது முகைதீன் தரகனார் பெயரில் கொடுக்கப்பட்டிருந்தது. பட்டா 123 தவறுதலாக வழங்கப்பட்டது என வாதியின் தந்தை வட்டாட்சியரிடம் முறையிட்டார் என்றால் சரிதான். மேற்படி முறையீட்டில் வட்டாட்சியர் பட்டா எண்.123 ஐ ரத்து செய்து வாதியின்

தந்தை இசக்கிபாண்டியின் பெயரில் பட்டா கொடுத்தார் என்றால் சரிதான். அதன் பின் நாங்கள் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்ததில் எங்கள் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது. கோட்டாட்சியர் உத்தரவு தவறு என வாதியின் தந்தைமாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்து, அந்த மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு வாதியின் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதை எதிர்த்து 1ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP No.279/2009 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி நீதிப்பேராணையில் 1ம் பிரதிவாதிக்கும் வாதியின் தந்தைக்கும் உள்ள பிரச்சனையை உரிமையியல் நீதிமன்றத்தில் தீர்த்து கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்களுக்கு சாகதமாக தான் தீர்ப்பு வந்தது.

4. உயர்நீதிமன்றத்தில் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வரவில்லை என்றும் சச்சரவை உரிமையியல் நீதிமன்றத்தில் தீர்த்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. செய்யது முகைதீன் தரகனார் பெயருக்கு எப்போதாவது பட்டா இருந்ததா என்றால் 1927லிருந்து 2007 ஆண்டு வரை அவர் பெயரில் தான் பட்டா இருந்தது. 11.12.1942க்கு பின்பு செய்பு முகைதீன் தரகனாருக்கு தாவா சொத்தில் யாதொரு உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. செய்பு முகைதீன் தரகனாரின் வாரிசுகளுக்கும் தாவா சொத்தில் எந்த ஒரு உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ, 2 முதல் 5 ஆவணங்களை இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரச்சனை என்ற நோக்கில் தான் 2 முதல் 8 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு 07.02.2007ல் ஒரு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் தாவா சொத்து அனுபவத்தில் 01.11.2016 முதல் இடையூறு

செய்ததால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் முன்பாத்தியஸ்தர்கள் ஏற்கனவே தாவா சொத்தைவிற்பனை செய்துவிட்ட நிலையில்,மூல பத்திரத்தை கொண்டு தற்போது தாவா சொத்தில் உரிமை உள்ளதா கூறி வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்வது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள வழக்கு பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 428/2016**

2023 வது ஆண்டு மார்ச் மாதம் 23 ம் நாள் D.W.2 ன் சாட்சிய வாக்கு மூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.அப்துல் காதர் | வட்டம் : | திருநெல்வேலி |
| த/பெ : | திரு.மீரான் மைதீன் | கிராமம் : | |
| வயது : | 59 | மதம் : | |

**23.03.2023 முதல் விசாரணை:** நான் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

(பிரிவு 33 இந்திய சாட்சிய சட்டத்திற்கு உட்பட்டு குறுக்கு விசாரணை வாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 428/2016**

08.04.2023– பி.வா.சா.2 திரு.அப்துல் காதர்

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து மற்றும் அதனுடன் இணைந்த சொத்துக்களும் சுக்கன் செய்யது முகம்மது லெப்பை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தின் சர்வே எண்.84/1ல் கண்ட 3 ஏக்கர் 41 சென்ட் என்றால் சரிதான். சுக்கன் செய்யது முகம்மது லெப்பை என்பவர் முகம்மது மைதீன் என்பவரிடம் 1924ம் வருடம் அடமானம் வைத்தார் என்றால் அது குறித்து தெரியாது. சுக்கன் செய்யது முகம்மது லெப்பை எனது முன்பாத்தியஸ்தர் செய்கு முகைதீனுக்கு 1927ம் வருடம் கிரையம் கொடுத்துள்ளாரா என்றால் சரிதான்.
2. சர்வே எண்.84/1ல் கண்ட சொத்து குறித்து அ.வ.எண்.250/1938 நடைபெற்றது என்றால் தெரியாது. சாட்சியம்அளிக்கும் முன்பு வழக்கு விபரம் குறித்து பிரதிவாதியிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். வாதிக்கு எந்த வகையில் தாவா சொத்து பாத்தியப்பட்டதாக கட்சி செய்கிறார் என்ற விபரத்தினை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.
3. தாவா சொத்து குறித்து ஏல நடவடிக்கை நடந்த விபரம் தெரியுமா என்றால் ஏலத்தில் தாவா சர்வே எண் கிடையாது. எனது முதல் விசாரணை பத்தி 8ல் தாவா சொத்து சுவாதீனம் எடுக்கப்படவில்லை என கூறியுள்ளேன் என்றால் அந்த சர்வே எண் ஏலம் விடாததால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். ஏல சான்றிதழை பார்த்துள்ளேன். அந்த ஏல சான்றிதழில் 84 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 84/1ஏ என குறிப்பிடப்படவில்லை.
4. சர்வே எண்.84 எத்தனை உட்பிரிவுகளகாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால்

2. அவை 84/1ஏ மற்றும் 84/1பி. மேற்சொன்ன இரண்டு உட்பிரிவுகளும் நில உச்சவரம்பு சட்டப்படி அரசால் கையகப்படுத்தப்பட்ட பிறகு ஏற்படுத்தப்பட்டவை என்றால் சரிதான். சர்வே எண்.84/1ஏ மற்றும் 84/1பி ஆகியவை உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பாக முழு சர்வே எண்.84 ஆக இருந்தது என்றால் சரிதான்.

5. நில உச்சவரம்பு சட்டத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு அரசால் வழங்கப்பட்ட உட்பிரிவு எண் என்ன என்றால் 84/1பி. ஆர்ஜித நடவடிக்கைக்கு பிறகு சர்வே எண்.84/1ஏ என்ற உட்பிரிவு 1 ஏக்கர் 71 சென்ட் நிலத்திற்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். நில ஆர்ஜிதம் சம்பந்தமான நோட்டீஸ்கள் பிரதிவாதிகள் பெயரில் வழங்கப்படவில்லை என்றால் செய்பு முகைதீன் தரகனார் வாரிசுகள் பெயரில் வழங்கப்பட்டது. அந்த அறிவிப்புகளை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

6. அந்த அறிவிப்புகளை பிரதிவாதிகள் தங்கள் விசாரணையில் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் தெரியாது. தாவா சொத்து சம்பந்தமான வில்லங்க சான்றிதழை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எத்தனை ஆண்டுகளுக்கான வில்லங்க சான்றிதழை பார்த்துள்ளேன் என்றால் 1927 முதல் 1947 மற்றும் 1975 முதல் நாளது தேதி வரை இடைப்பட்ட காலத்திற்கு பார்க்கவில்லை.

7. 1927 முதல் 1947 வரையான காலத்தில் 3 கிரையங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் ஒரு கிரையம். அந்த ஒரு கிரையம் யார் பெயருக்கு ஏற்பட்டது என்றால் செய்பு முகைதீன் தரகனார் பெயருக்கு ஏற்பட்டது. 1927 முதல் 1947 வரையான காலத்திற்கான வில்லங்க சான்றிதழ் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. 1927 முதல் 1947 வரையான காலத்திற்கான வில்லங்க சான்றிதழை பார்த்திருந்தால் 3 கிரையம்

நடந்த விபரம் தெரியவந்திருக்கும் என்றும், நான் பிரதிவாதிக்கு சாதமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. 1927 முதல் 1990 வரை பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களின் பெயரில் பத்திரம் ஏதும் கிடையாது என்றால் பட்டா எண்.123 பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே பட்டா பெயர் மாற்றம் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு, அது சென்னை உயர்நீதிமன்றம் வரை வழக்கு பதிந்து விசாரணை நடந்தது என்றால் சரிதான். பட்டா சம்பந்மாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்த இறுதி உத்தரவை பார்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்து சம்பந்தமான இரு தரப்பினர்களுக்கும் உள்ள பிரச்சனையை உரிமையியல் நீதிமன்றத்தில் தீர்த்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதியின் சித்தப்பா, மற்ற பிரதிவாதிகள் எனது உறவினர்கள்.

9. தாவா சொத்திற்கு பிரதிவாதி சம்பந்தமான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அ.வ.எண்.250/1938 சம்பந்தமான வழக்கு பதிவேட்டை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 11ல் வழக்கு பதிவேட்டை நான் பார்த்துள்ளதாக கூறியிருந்தால் 1ம் பிரதிவாதி கூறியதன் அடிப்படையில் அவ்வாறு கூறினேன். நான் வழக்கு பதிவேட்டை பார்க்கவில்லை.

10. எனது முதல் வசாரணையில் பல விபரங்களை 1ம் பிரதிவாதி கூறியதன் அடிப்படையில் எனக்கு தெரியும் என கூறியுள்ளேன். அந்த விபரங்கள் உண்மையா என்று நான் ஆவணங்களை சரிபார்த்தேனா என்றால் பட்டா வழக்கு நடந்த போது நான் உடன் இருந்து பார்த்தேன். பட்டா விசாரணையில் பிரதிவாதிகள் சம்பந்தமாக வாக்குமூலம் ஏதும்

கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை.

11. எனது முதல் விசாரணையில் கூறிய விபரங்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி கூறி தான் எனக்கு தெரியும் என்றால் ஒரு சில விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். செய்கு முகைதீன் பெற்ற அடமானத்திற்காக தாவா சொத்து நீதிமன்றம் மூலம் ஏல விற்பனை நடைபெற்றுள்ளது என்றால் சரியல்ல. செய்கு முகைதீன் தாவா சொத்தில் உரிமை இல்லாத போது, அவரது பின் வழி தோன்றுபவர்களுக்கு எந்த உரிமையும் தாவா சொத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து நீதிமன்ற ஏலம் மூலம் விற்பனை செய்ய்ப்பட்டு, வாழ்விப்பு செய்து கொடுக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகளோ, அவரது முன்பாத்தியஸ்தர்களோ அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டு, வாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதியின் சித்தப்பா என்ற முறையில் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No. 428/2016

2023 வது ஆண்டு ஜுலை மாதம் 04-ம் நாள் பி.வா.சா. ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ரசூல்பீவி | வட்டம் | திருநெல்வேலி |
| தந்தை பெயர் | திரு.கலீல் ரகுமான் | கிராமம் | |
| வயது | | மதம் | |

04.07.2023 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 8 ம் பிரதிவாதி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

(பிரிவு 33 இந்திய சாட்சிய சட்டத்திற்கு உட்பட்டு குறுக்கு விசாரணை பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No.428/2016

16.08.2023. பி.வா.சா.2 திருமதி.ரசூல் பீவி

முதல் விசாரணை தொடர்ச்சி

07.02.2007 தேதியிட்ட பொது அதிகார ஆவணம் பி.வா.சா.ஆ.6.

(பிரிவு 33 இந்திய சாட்சிய சட்டத்திற்கு உட்பட்டு குறுக்கு விசாரணை வாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

<u>1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>
<u>O.S.No.428/2016</u>

12.09.2023. பி.வா.சா. 2 திருமதி.ரசூல்பீவி

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. மேலப்பாளையம், அசன் தரகனார் தெரு வீட்டில் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் என்றால் 15 ஆண்டுகளாக. எனக்கு தற்போது 40 வயது ஆகிறது. பி.வா.சா.ஆ.6 ல் உள்ள சொத்து எங்கு உள்ளது என்றால் கருங்குளம் என்ற ஊரில் உள்ளது. கருங்குளத்தில் எங்கு அந்த சொத்து உள்ளது என்றால் அது தெரியாது. அங்கு இருப்பதாக கூறினார்கள்.
2. நான் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்த சொத்து நஞ்சை அல்லது புஞ்சை வகைபாட்டை சார்ந்ததா என்றால் அது குறித்து தெரியும். பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்த சொத்தின் விஸ்தீரணம் 300 ஏக்கர். அது சம்பந்தமான ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் பார்த்து பட்டாவை. அந்த பட்டா யார் பெயரில் தாக்கலாகி உள்ளது என்றால் மலுக்கு மீரான்.
3. பொது அதிகார ஆவணம் என்ன வகைக்காக எழுதி கொடுக்கப்பட்டது என்றால் விற்பனை செய்வதற்காக. அதன் அடிப்படையில் சொத்து விற்கப்பட்டதா என்றால் இல்லை. சொத்தின் பெயரில் என்ன வழக்கு நடக்கிறது என்றால் விற்பனை செய்வது சம்பந்மாக பிரச்சனை நடக்கிறது.
4. வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகள் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தது என்றால் எனது பெரியப்பா மகன் அழைத்து வந்தார். என்ன சாட்சியம் அளிக்க என்னை அழைத்து வந்தார் என்றால் இடம் விற்பது சம்பந்மாக சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார்.
5. தாவா சொத்து சம்பந்தமாக வேறு விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. பொது அதிகார ஆவணத்தில் கூறப்பட்டுள்ள ரசூல் என்ற ரசூல் பீவி நான் கிடையாது என்றால் சரியல்ல. எனது வயது குறுக்கு

விசாரணையில் கூறிய நாற்பதோ அல்லது முதல் விசாரணையில் கூறியுள்ள நாற்பத்தி மூன்றோ கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் பணம் பெற்று கொண்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.